(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(1).]

# பாராளுமன்றத்தின் 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2025 மே 09, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2025 மே 20, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 மார்ச் 19 ஆம் திகதிய 2428/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.05.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.05.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 51 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.05.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க திருத்தப்பட்டதான உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தித் தீர்வை தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.05.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

## 2025 மே 22, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2025 ஜூன் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

305/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள பீடங்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு பீடத்திலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iii) அரசாங்கப் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கான வருடாந்த சராசரிச் செலவு மற்றும் துறைவாரியாக வகைப்படுத்தப்பட்ட பட்டப்படிப்பு ஒன்றை பூர்த்திசெய்வதற்கான மொத்தச் செலவு யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iv) இலங்கையிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) ஒவ்வொரு தனியார் பல்கலைக்கழகத்திலும் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(vi) தனியார் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கான மொத்தச் செலவு மற்றும் துறைவாரியாக வகைப்படுத்தப்பட்ட பட்டப்படிப்பு ஒன்றினைப் பூர்த்தி செய்வதற்கான மொத்தச் செலவு யாதென்பதை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு அரசாங்கப் பல்கலைக்கழகத்திலும் உள்ள பேராசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தப் பேராசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு அரசாங்கப் பல்கலைக்கழகத்தையும் நடாத்துவதற்கான மொத்தச் செலவு யாதென்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள மாணவர் ஒருவருக்கான மொத்தச் செலவு யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு அரசாங்கப் பல்கலைக்கழகத்தினதும் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றினதும் உலகத் தரவரிசைப்படுத்தல் யாதென்பதையும்?

அவர் இச்சபைக்கு மேலும் வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

381/2025

கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்திற்கமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அத்தகைய ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி சாரா பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இலங்கையிலுள்ள மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்திற்கமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அத்தகைய ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி சாரா பணியாட்டொகுதி ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) கடந்த அரசாங்கத்தினால் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ள மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) அத்தகைய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

513/2025

கௌரவ பத்மசிறி பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள குளங்களில் தற்போது புனரமைப்பு செய்யப்பட வேண்டிய நிலையிலுள்ள குளங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி குளங்களை புனரமைப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின், மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

585/2025

கௌரவ அஜித் கிஹான்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீரற்ற சுற்றாடல் நிலைமைகள் காணப்பட்ட போதும் மரக்கறி மற்றும் பழ உற்பத்திகளை மேற்கொள்கின்றதொரு வலயமாக கற்பிட்டியை அடையாளப்படுத்த முடியும் என்பதையும்;

(ii) மழைக் காலங்களில் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கி பயிர் சேதம் ஏற்படுவதால் அப்பிரதேச மக்கள் பெருமளவில் சிரமங்களுக்கு ஆளாகின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மழை காரணமாக ஏற்படும் பயிர் சேதங்களுக்காக குறித்த விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கற்பிட்டியில் மரக்கறி மற்றும் பழச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

791/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வெலங்கொல்லவத்த (ஹாமுகே வத்த) எனப்படும் அரச காணியின் தற்போதைய நிலை யாது என்பதையும்;

(ii) அந்தக் காணியின் விஸ்தீரணம் ஏக்கர் அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

(iii) அந்தக் காணி கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அத்தகைய கைத்தொழில்கள் யாவை என்பதையும்;

(v) கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஏக்கர் அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

(vi) அந்தக் கைத்தொழில்களின் பணியாளர் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

801/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “தேசத்திற்கு மகுடம்” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குளியாபிட்டிய மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாரிய விழா மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்டு, இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கட்டிடத்திற்கு இதுவரையில் செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குளியாபிட்டிய பிரதேச மக்களுக்கு பயன்மிக்கதான இவ்விழா மண்டபத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்காக எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அதற்காக செலவாகும் பணத்தொகை கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அப்பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

836/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மஹா எல கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் எத்தனை கட்டங்களை கொண்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்திற்குள் உள்வாங்கப்படுகின்ற மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் நன்மைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அக்கருத்திட்டத்தை உரிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்ய முடியாமல் போனதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் நிறைவு செய்யப்பட வேண்டிய வருடம் யாதென்பதையும்;

(iii) உரிய காலப்பகுதிக்குள் மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்ய முடியாமல் போனமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) இன்றளவில் அக்கருத்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

869/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு நிறுவப்பட்டபோது, தென் மாகாணத்தில் அந்த ஆணைக்குழுவிற்கு சாட்டுதல் செய்யப்பட்ட காணிகளின் அளவு, ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) அந்தக் காணிகளுள், தற்போது தனியார் உரிமைக்கு கையளிப்பட்டுள்ள 50 ஏக்கருக்கும் குறைவான காணிகளின் எண்ணிக்கை, அத்தகைய ஒவ்வொரு காணியினதும் விஸ்தீரணம், காணி சாட்டப்பட்டுள்ள நபரின் பெயர் மற்றும் காணி சாட்டப்பட்டிருப்பது விவசாய நடவடிக்கைகளுக்காகவா இன்றேல் வணிக நடவடிக்கைகளுக்காகவா எனும் விபரங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஏற்ப வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இதுவரை சாட்டப்படாத அல்லது கையுதிர்க்கப்படாத காணிகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் விஸ்தீரணம் பற்றிய விபரங்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஏற்ப வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அந்தக் காணிகளுள் தற்போது சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ள காணிகள் யாவை என்பதையும்;

(v) புதிய கருத்திட்டங்களுக்காக கோரப்பட்டுள்ள காணிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

871/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் உள்ளூர் அதிகார சபைகளால் இருப்பாட்சி செய்யப்படுகின்ற அசையா சொத்துக்கள், ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்கும் ஏற்ப வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) அச்சொத்துக்களில், உள்ளூர் அதிகார சபைகளால் சட்டரீதியாக இருப்பாட்சி செய்யப்படுகின்ற அசையா சொத்துக்களின் அளவு மற்றும் சட்டரீதியற்ற முறையில் இருப்பாட்சி செய்யப்படுகின்ற அசையா சொத்துக்களின் அளவு ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மேற்படி உள்ளூர் அதிகார சபைகளில் சட்டரீதியற்ற முறையில் இருப்பாட்சி செய்யப்படுகின்ற அசையா சொத்துக்கள் காணப்படின், அவற்றைச் சட்டப்பூர்வமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

874/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனை வடக்கு பிரதேசச் செயலாளர் பிரிவில், “அளிப்புப் பத்திரங்கள்” அல்லது “காணி உரிமப் பத்திரங்கள்” வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அம்மக்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 ஜூன் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

514/2025

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது தடுப்புக் காவலில் உள்ள அரசியல் கைதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு அரசியல் கைதியும் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலம், இவர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் தடுத்துவைப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள சட்டம் வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி அரசியல் கைதிகளை விடுவிப்பதற்குள்ள திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

517/2025

கௌரவ ஹர்ஷன ராஜகருணா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1000 தேசிய பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை தேசிய பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் பெயர் பலகை மற்றும் பிரதான நுழைவாயிலை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது அந்தப் பாடசாலைகள் நிரல் அமைச்சின் மூலம் நிர்வகிக்கப்படுகிறதா இன்றேல், சம்பந்தப்பட்ட மாகாண சபையின் மூலம் நிர்வகிக்கப்படுகிறதா என்பதையும்;

(iv) அதன்படி, இதுவரை உருவாக்கப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அந்தத் தேசிய பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை நிரல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

583/2025

கௌரவ லால் பிரேமநாத்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இலங்கையில் பராமரிக்கப்படும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாத்தறை மாவட்டத்தில் காணப்படும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அக்குரஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அத்துரலிய பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி நிலையங்களுள் நிர்மாணப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள கட்டிடமொன்றை கொண்டுள்ள நிலையமொன்றைப் பற்றி அறிவாரா என்பதையும்;

(vi) அக்கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) அக்கட்டிடத்தை புனரமைத்து, அதனை இளைஞர் சமுதாயத்தின் பயன்பாட்டுக்கென வழங்குவதற்கு வகுத்துள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

605/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் பதிவு செய்யப்பட்டுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் (முன்பள்ளிகள்) எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி முன்பள்ளிகளில் சேவையாற்றும் முன்பள்ளி நிர்வாகிகள் பூர்த்தி செய்ய வேண்டிய ஆகக் குறைந்த கல்வித் தகைமை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் சேவையில் ஈடுபட்டுள்ள முன்பள்ளி நிர்வாகிகளுள் மேற்படி ஆகக் குறைந்த கல்வித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள நிருவாகிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) சகல முன்பள்ளிகளுக்கும் ஒரே பாடத்திட்டம் அல்லது அவ்வாறான வழிகாட்டல் பொறிமுறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்பள்ளி, ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை, பல்கலைக்கழகம் மற்றும் இதர கல்வி நிலைகளுள் முன்பள்ளிக் கல்வியே மிகவும் தீர்மானகரமானதும், முக்கியமானதுமாகும் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், முன்பள்ளி கல்வியை நேரடியாக கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வந்து, அதனை மேலும் பயனுறுதிமிக்க வகையில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

703/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மிக வேகமாக மாற்றமடைந்துவரும் இந்த உலகில் காலத்தின் போக்குகளுக்கு இசைவானதாக கல்வி மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்களுக்கு அமைவாக கல்வி மறுசீரமைப்பானது எத்தனை வருடங்களுக்கொரு தடவை மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதையும்;

(iii) இலங்கைக்கு புதிய கல்வி மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஜூன் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

612/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தை தாபித்ததன் நோக்கங்கள் யாவை;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைத்துள்ள தொகை யாது;

(iii) மேற்படி நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை;

(iv) மேற்படி நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைத்துள்ள நிதி, மேற்படி நிதியத்தின் நோக்கங்களுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(v) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

632/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இஸ்ரேல் இனத்தவர்களின் சமய மற்றும் கலாசார நிலையங்கள் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றுக்கு சட்ட ரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

635/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் பராமரிப்புச் சேவைப் பதவிக்காக இஸ்ரேலுக்குச் சென்றுள்ள இலங்கைப் பணியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களைத் தெரிவுசெய்கையில் பின்பற்றப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தொழில்வாய்ப்புகளை வெளிப்படைத்தன்மையுடன் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

649/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அஸாத் மௌலானா என்ற நபர் சனல் - 4 அலைவரிசைக்கு அறிக்கையொன்றினை முன்வைத்த திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கை தொடர்பில் சமூகத்தில் பாரிய கருத்தாடல் உருவாகியதை அறிவாரா என்பதையும்;

(iii) அஸாத் மௌலானா என்பவரை இலங்கைக்கு அழைத்து வந்து, அது தொடர்பில் மேலதிக வாக்குமூலங்களைப் பதிவுசெய்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

668/2025

கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரான டாக்டர் சத்தியமூர்த்தி தங்கமுத்து கடந்த மூன்று வருடங்களில் அரசாங்கத் துறையில் 170 பேரை தொழிலுக்கு அமர்தியுள்ளார் என்பதையும்;

(ii) இந்த ஊழியர்களுக்கு மாதாந்தம் 10000.00 ரூபாவிற்குக் குறைவான தொகை அவர்களின் 36 மாத தொழிற் காலத்தின் போது ஆகக்கூடுதலாக 05 மாத காலத்திற்கு மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இவ்வாறான தொழில் நடைமுறைகள் இலங்கையின் தொழில் சட்டங்களை மீறியுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த ஊழியர்கள் அரசாங்கத் துறைக்கு நியமிக்கப்பட்ட அடிப்படையினையும்;

(ii) இந்த ஊழியர்களின் தற்போயை தொழில் நிலைமையினையும்;

(iii) இரண்டு மாதங்களுக்கு முன்னர் எழுத்திலான ஒரு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டும் டாக்டர் தங்கமுத்துவிற்கு எதிராக இதுவரையில் எவ்விதமான நடவடிக்கைகளும் ஏன் எடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

702/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன , அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கழியோடை ஆற்றை அண்டியதாக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான தீகவாபி தொடக்கம் கழியோடை வரையிலான 4 கிலோ மீற்றர் நீளமான பிரதான கால்வாய் அடிக்கடி உடைப்பெடுப்பதன் காரணமாக அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில் மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்களில் காணப்படுகின்ற ஆயிரக்கணக்கிலான ஏக்கர் வயல் நிலங்கள் பாரியளவில் பாதிக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்குறித்த கால்வாயை புனரமைப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தால் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான செலவின மதிப்பீடு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

714/2025

கௌரவ தனுஷ்க ரங்கனாத்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அரசாங்க தமிழ் மொழிப் பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அப்பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவற்றில் க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) வரை கல்வி போதிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் தமிழ் மொழிமூலம் க.பொ.த. (உ/த) பாடங்களை கற்கக்கூடிய பாடசாலைகள் எத்தனை என்பதையும்;

(ii) அவற்றில் கலை மற்றும் வர்த்தகப் பாடத் துறைகளை தமிழ் மொழிமூலம் கற்கக்கூடிய பாடசாலைகள் எத்தனை என்பதையும்;

(iii) கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளை தமிழ் மொழியில் கற்கக்கூடிய பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) களுத்துறை மாவட்டத்தில் அனைத்து பாடத் துறைகளையும் தமிழ் மொழிமூலம் கற்கக்கூடிய அரசாங்க பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) களுத்துறை மாவட்டத்தில் அத்தகைய ஒரு பாடசாலையையேனும் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

719/2025

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— பிரதம அமைச்சரும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியின் போது "அருகிலுள்ள பாடசாலை – சிறந்த பாடசாலை" கருத்திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணப் பணிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகளில் இன்றளவில் நிறைவு செய்யப்பட்ட பணிகளின் எண்ணிக்கை மற்றும் நிறைவு செய்யப்படாத பணிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) பணிகள் நிறைவு செய்யப்படாத நிர்மாணப்பணிகளை விரைவில் நிறைவு செய்வதற்கு எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

772/2025

கௌரவ லசித் பாஷண கமகே,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வெலிசர, களஞ்சியத் தொகுதியில் காலாவதியான உணவுப் பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) அவற்றை அவ்விடத்தில் சேகரிப்பதற்கான காரணம் யாது;

(iii) அவை காலாவதியானதற்கான காரணம் யாது;

(iv) இவ்வாறு உணவுப் பொருட்கள் பாரியளவில் காலாவதியாகியுள்ளமை தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

854/2025

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம் ரத்வத்தே,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹியத்தகண்டிய நகரில் உள்ள 'மன்சல' மற்றும் 'ஹெல பொஜுன்ஹல' அருகே சுமார் இரண்டு ஏக்கர் பரப்பளவு கொண்ட காணி இரண்டு நபர்களுக்கு கையுதிர்க்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அந்த நபர்களின் பெயர்கள், கையுதிர்ப்பு செய்யப்பட்டதற்கான அடிப்படை மற்றும் நோக்கம் யாது என்பதையும்;

(iii) பொலிஸ் நிலையத்திற்கும் 'ஷாலிகா மண்டபத்திற்கும்' இடையில் சுமார் 60 பர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணி கையுதிர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி கையுதிர்ப்பு யாருக்கு, எந்த நோக்கத்திற்காக செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(v) கலாச்சார நிலையத்திற்கு அருகிலுள்ள காணி துண்டங்களாக பிரிக்கப்பட்டு கையுதிர்ப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், கையுதிர்ப்பு செய்யப்பட்டுள்ள நபரின் பெயர் மற்றும் கையுதிர்ப்பு செய்யப்பட்டிருப்பதற்கான அடிப்படை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நகர அபிவிருத்தி அதிகாரசபை, தெஹியத்தகண்டிய நகர அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளதோடு, மேற்படி காணிகளை அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வழிமுறைகள் யாவை என்பதையும்;

(ii) தற்போது அந்தக் காணிகள் கையுதிர்ப்பு செய்யப்பட்டுள்ள விதத்தின் அடிப்படையில் குறித்த அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்த முடியுமா என்பதையும்;

(iii) இன்றேல், அந்தக் கையுதிர்ப்பினைத் திருத்தியமைக்க முடியுமா என்பதையும்;

(iv) அந்தக் காணிகளை மீளப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஜூன் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

12/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிறுவப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி விசேட பொருளாதார மத்திய நிலையங்களை நிறுவுவதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iv) அவற்றின் வர்த்தக மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

74/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில், போரதீவுபற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான பளுகாமம் பிரதேசத்தில் அமைந்துள்ள தபால் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டிடமொன்று இல்லையென்பதுடன் மேற்படி தபால் அலுவலகம் தற்காலிக கட்டிடமொன்றில் பேணிவரப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி தபால் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) அக்கட்டிடம் நிர்மாணிக்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

95/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பிரதான துறைமுகங்கள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மேற்படி ஒவ்வொரு துறைமுகத்தினதும் வருமானம் மற்றும் செலவு ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

158/2024

கௌரவ (சட்டத்தரணி) தயாசிறி ஜயசேக்கர,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பெனியினுடைய தலைவரின் பெயர் யாதென்பதையும்;

(ii) அவரது தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கம்பெனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வொவ்வோர் பணிப்பாளர் சபை அங்கத்தவருடைய பெயர், முகவரி, கல்வித் தகைமைகள், இதுவரையிலும் வகித்துள்ள பதவிகள், அப்பதவிகளை வகித்த நிறுவனங்கள் மற்றும் தற்போது ஏனைய நிறுவனங்களில் வகிக்கின்ற பதவிகள் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

191/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான சீனி உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2022 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ஆண்டுவாரியாக வெவ்வோறாக எவ்வளவென்பதையும்;

(iv) அரசாங்கத்திற்குச் சொந்தமான சீனி உற்பத்தி தொழிற்சாலைகளில் தற்போது விற்பனை செய்ய முடியாத நிலையில் தேங்கிக் கிடக்கும் சீனி மற்றும் எதனோலின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) இலங்கையில் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

214/2024

கௌரவ ரோஹண பண்டார,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் காணப்படும் சிறைச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சிறைச்சாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சிறைச்சாலையிலும் இன்றளவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) சிறைச்சாலைகளில் நிலவும் அதிக நெரிசலைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

223/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை முதலீட்டுச் சபையினால் களுத்துறை மாவட்டத்தின் பண்டாரகம, மில்லனிய பிரதேசத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி செயலாக்க வலயத்திற்கான காணி சுவீகரிப்பின் முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை யாது என்பதையும்;

(iii) மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் வீதிக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கும் மேற்படி வலயத்திற்கு குழாய் நீரை வழங்குவதற்கும் மற்றும் மின்சாரம் வழங்குவதற்கும் இலங்கை முதலீட்டுச் சபையினால் வெவ்வேறாகச் செலவிடப்பட்ட தொகை யாது என்பதையும்;

(iv) மேற்படி வலயத்தின் வீதிக் கட்டமைப்பு அபிவிருத்தியின் முன்னேற்றம் யாது என்பதையும்;

(v) தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்டமாகக் கருதி மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் மீதமாகவுள்ள அபிவிருத்திப் பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

390/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட ஊழல் எதிர்ப்புக் குழு அலுவலகம் அப்போதைய பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் நிறுவப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி குழுவை நிறுவுவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அக்குழுவில் இடம்பெற்றிருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(v) ஊழல் எதிர்ப்புக் குழு அலுவலகம் மூடப்பட்டபோது அவ் அலுவலகத்திற்குக் கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ் ஊழல் எதிர்ப்புக் குழுவின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றிய நபருடைய பெயர் மற்றும் முகவரி யாவை என்பதையும்;

(ii) அவர் அனுமதியின்றி வாகனத்தைச் செலுத்தி அதனை விபத்திற்குள்ளாக்கியதை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

619/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் “மகாவலி மறுமலர்ச்சி வாரம்” என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் யாது என்பதையும்;

(iii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கென செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது என்பதையும்;

(iv) மகாவலி விவசாயிகளை வலுவூட்டுவதற்கு மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

917/2025

கௌரவ நிசாம் காரியப்பர், ஜனாதிபதி சட்டத்தரணி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரட்டைப் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள சில குறிப்பிட்ட தனிநபர்கள் இலங்கையினைப் பிரதிநிதித்துவம் செய்து தூதுவர்களாகவும் உயர் ஸ்தானிகர்களாகவும் சேவையாற்றுகின்றனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவ்வாறான தூதுவர்களதும் உயர் ஸ்தானிகர்களதும் பெயர்களையும் அவர்களின் நியமனத் திகதிகளையும் ஏனைய பொருத்தமான விபரங்களையும் வெவ்வறாகவும்;

(iii) இரட்டைப் பிரசாவுரிமையுடைய தனிநபர்களை உயர் மட்ட இராஜதந்திரப் பதவிகளுக்கு நியமிப்பது சாத்தியமான அக்கறை முரண்பாட்டுக்கு இடமளிக்கலாம் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், இவ்வாறான அக்கறை முரண்பாடுகளைத் தடுக்க/நிவர்த்தி செய்ய எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் நடவடிக்கைகளையும்;

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.14/2024

கௌரவ ரோஹண பண்டார,— கிராமிய கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பை உரிய முறையில் மேற்பார்வை செய்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— மக்களுக்கு மிக நெருக்கமான பல கிராமிய கூட்டுறவு வங்கிகள் கடந்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் அதன் வைப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அவ்வங்கிகளை அரசாங்கம் உரிய முறையில் மேற்பார்வை செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரித்தல்,— இலங்கையின் தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 27/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒவ்வொரு இளைஞரையும் போதுமான வருமானத்தை ஈட்டும் தொழிலைக் கொண்டிருக்கும் ஆளாக அல்லது சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுதல்,— 18 வயதை அடைந்த ஒவ்வொரு இளைஞருக்கும் போதிய வருமானமீட்டும் தொழிலைக் கொண்டிருப்பதற்கான உரிமை இருக்க வேண்டும் அல்லது தொழில்புரியாது இருப்பின், சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுவதற்கான நிதியுதவி வழங்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இனங்களின் அல்லது மதங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடுவதைத் தடை செய்தல்,— இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இனங்களை அல்லது மதங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடல் தடைசெய்யப்பட வேண்டும் என்றும், இனங்களை அல்லது மதங்களைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டு தற்போது செயற்படும் அரசியல் கட்சிகளின் பெயர்களிலிருந்து அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபித்தல்,— தாக்குதல், கடத்தல், கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், கொலை மற்றும் நிதி மோசடி உள்ளிட்ட புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்வதற்கும், ஊழியர்கள் பாதுகாப்பாக இலங்கைக்குத் திருப்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்யவும் மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2025

கௌரவ லால் பிரேமநாத்,— அடிமட்டத்தில் செயற்படும் நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பிலும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்,— மக்களுக்கு மிக நெருக்கமான மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களாக காணப்படுகின்ற அடிமட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பிலும் பெரும்பாலும் மக்கள் அதிருப்தியான நிலையில் இருப்பதால் இந்நிறுவனங்கள் தொடர்பாக மேலதிக அவதானம் செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் கட்டமைப்பை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— இலங்கை ஒரு புதிய மறுமலர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், நாட்டின் சுற்றுலாத்துறை உள்நாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் தாழ்நில மழைக்காடுகளில் உலக மரபுரிமையாக விளங்கும் சிங்கராஜ வனமும், விசேட விலங்குகள் மற்றும் தாவர இனங்கள் செறிந்து காணப்படும் கன்னெலிய காடு மற்றும் ஹினிதும மலையை உள்ளடக்கிய மலைத்தொடரின் (ஹேகொக்) உயிரியல் அமைப்புமுறை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் விசேட கவனத்தை ஈர்த்துள்ள சூழல் தொகுதியாக உள்ளதாலும், இச் சூழல் அமைப்பு முறையைக் கொண்ட பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் தொகுதியை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தி அதனை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/2025

கௌரவ ருவன் மாபலகம,— பாடசாலைக் கலைத்திட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுக்கவியல் விடயதானங்களை உள்ளடக்குதல்,— இந்நாட்டு மக்கள் எதிர்கொள்கின்ற நாளாந்த பிரச்சினைகளுக்கான முக்கிய காரணமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைச் சட்டம் பற்றிய அறியாமை அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், சட்டம் பற்றிய அறியாமை சட்டத்தின்முன் குற்றமற்றவராக இருப்பதற்கான விடயமாக அமையாததாலும், பாடசாலைக் கலைத்திட்டம் சிக்கலாக அமைவதை தவிர்த்து 6 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரை பாடசாலை மாணவர்களின் குடியுரிமைக் கல்விப் பாடத்திட்டத்தில் நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய கற்பித்தலை உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2025

கௌரவ ரோஹண பண்டார,— பேராசிரியர் பதவிகள் மற்றும் கலாநிதி பட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— தற்போது எமது சமூகத்திலுள்ள அநேகமானோர் பேராசிரியர், கலாநிதி போன்ற பதவிகளையும், பெயர்களையும் தவறான முறையில் பயன்படுத்தி வருவதனால், அதனை தடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடத்தை உரிய முறையில் தொழிற்படவைப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடம் நிறுவப்பட்டு, இன்றளவில் 35 வருடங்கள் கடந்திருப்பதாலும், தற்போது அந்த ஆய்வுகூடம் முறையாக தொழிற்படாததாலும், இறக்குமதி செய்யப்படும் பெருமளவான மருந்துகள் உரிய தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றமையால், அந்நிலையை தவிர்ப்பதற்காக உரிய வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.47/2025

கௌரவ ரோஹண பண்டார,— விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பித்தல்,— நாட்டிலுள்ள விவசாயிகளுக்கான நலன்புரித் திட்டங்களை வகுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குரியது என்பதாலும், இந்நாட்டின் மக்கள் தொகையில் பெருமளவானோர் விவசாயிகள் என்பதாலும் விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப் படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.50/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பைனஸ் செய்கையால் நீர் மூலங்கள் மற்றும் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— விசேடமாக ஊவா மாகாணம் உட்பட மலையகப் பிதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பைனஸ் செய்கையால் நீர் மூலங்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, அவற்றை அகற்றி, பயன்தரு உள்நாட்டு பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.